# கல்விச் சுற்றுலா நடைமுறைகள்

MOE Circular Letter 2/SEC/49

23.07.1982



**Zonal Education Office - Vavuniya North**

## கல்விச்சுற்றுலா என்பதனால் கருதப்படுவது…

- பாடவிதானத்துள் உள்ளடங்கும் விடயங்களின் நேரடி அனுபவத்தை மாணவருக்கு பெற்றுக்கொடுக்கும் நோக்கிலான தரிசிப்புக்கள்

## அனுமதி பெறுதல் வேண்டுமா? ஏன்?

- ஆம் – கட்டாயமாக, நோக்கம், வசதி, பாதுகாப்பை உறுதிப்படுத்த

## யாரிடம், எப்போது அனுமதி பெற வேண்டும்?

- வலயக் கல்விப் பணிப்பாளரிடம், சுற்றுலாக்கு 15 நாட்களின் முன்னர் (கல்வி நிர்வாக கிளை)

## எக்காலத்தில் செல்லலாம்?

- கட்டாயமாக விடுமுறைக்காலங்கள் அல்லது வார இறுதி நாட்கள்
- பாடசாலை நாட்கள் பயன்படுத்தப்பட முடியாது.
- முதலாம் தவணைக்காலங்கள் விரும்பத்தக்கது (வடக்கு மாகாண வழிகாட்டல்)
- முடிவடைந்த அடுத்த பாடசாலை நாள் வகுப்புக்கள் இடம்பெறுதல் வேண்டும்.

## மாணவருடன் யார் யார் செல்லலாம்?

கட்டாயமாக.....

- அதிபர் அல்லது சுற்றுலாத் தலைவராக பொறுப்பளிக்கப்பட்டவர்
- ஆசிரியர்கள் – 20 மாணவருக்கு ஒருவர் என்றவாறு, ஆண் பெண் ஆசிரியர்கள்
- பெற்றோர் – குறைந்தது 30 பேருக்கு ஒருவர், ஆண், பெண்

மேலதிகமாக....

- சுற்றுலா உதவி நோக்கத்திற்காக அனுமதியுடன் கல்வி சாரா ஊழியர்

## சுற்றுலா முடிவடைந்ததும்

- ஒருவாரத்திற்குள் வலயக் கல்விப் பணிப்பாளருக்கு அறிக்கை
  - நோக்கம் நிறைவேற்றப்பட்டமை தொடர்பான அறிக்கை
  - உண்மைச் செலவு அறிக்கை
- பாடசாலையில் அறிவுப் பகிர்வு - தேவைப்படின் முன்னளிக்கையுடன்

# அனுமதிக்கு தேவையான விடயங்கள்

- கோரிக்கை கடிதம் – விபரங்களுடன், கோட்டக் கல்விப் பணிப்பாளரின் சிபார்சுடன்
- சுற்றுலா செல்லும் மாணவர் விபரம் – பெயர், தரம், பால்....
- சுற்றுலா செல்லும் ஆசிரியர் விபரம் – பெயர், பால், தே.அ.அ இல
- சுற்றுலா செல்லும் பெற்றோர் விபரம் – மாணவர் பெயர், பெயர், தே.அ.அ.இல
- பெற்றோரின் சம்மதப் படிவம் – மாணவர் பெயர், பெயர், தே.அ.அ.இல
- தங்குமிட ஒழுங்குபடுத்தல் கடிதம் – சம்மதம், விபரங்கள்
- பயணத் திட்டம் – திகதி, நேரம், தங்குமிடங்கள், பார்வையிடும் இடங்கள், பாதைகள்
- பயணப்பாதை வரைபடம் – தங்குமிடம் காட்டப்படல் வேண்டும்
- வரவுசெலவுத்திட்டம் – நிதி மூலம் காட்டப்படல் வேண்டும்
- வருடாந்த அமுலாக்கல் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டதாயின் அதன் பிரதி
- வாகன விபரங்கள் – உறுதிப்படுத்தப்பட்ட பிரதிகள்
  - பதிவுச்சான்றிதழ்
  - காப்புறுதிப்பத்திரம்
  - வருமான உத்தரவுப்பத்திரம்
  - சாரதி அனுமதிப் பத்திரம்

# கவனிக்க வேண்டிய விடயங்கள்

- தங்குமிடம்
    - வசதியான, பாதுகாப்பான இடம்
    - ஆண், பெண் தனித்தனியாக
    - முன் அனுமதி பெற்றிருத்தல்
- எதிர்பாராத சிக்கல்கள் தோன்றுமிடத்து
    - ஒழுங்கு சார்ந்ததெனில் அருகிலுள்ள பொலிஸ் நிலையத்தில் அறிவித்தல், வலயக் கல்விப் பணிப்பாளருக்கு அறிவித்தல்
    - மருத்துவம் சார்ந்ததெனில் அருகிலுள்ள அரச மருத்துவமனையை நாடுதல், வலயக் கல்விப் பணிப்பாளருக்கு அறிவித்தல்
- மாணவர்களின் வீட்டிலிருந்து பாடசாலைக்கும், பாடசாலையிலிருந்து வீட்டிற்கும் பயண ஒழுங்கு
- ஆசிரியர்கள் கடமை
    - தமக்கு ஒதுக்கப்பட்ட பிள்ளைகளின் தேவைகள், வசதிகள், ஒழுங்குகள், ஆற்றுப்படுத்தல்
    - கூட்டுச்சேர்த்தல்
    - பாதுகாப்பு

# கவனிக்க வேண்டிய விடயங்கள்

- பயணங்கள்
  - அனுமதிக்கப்பட்ட வேகம்
  - இரவுப் பயணங்கள் தவிர்ப்பு
  - பாதை மாற்றங்கள் இருப்பின் அறிவித்தல்
- பயணத்திட்டம்
  - அனுமதி பெற்ற திட்டத்தை எவ்வகையிலும் மாற்றுதல் கூடாது
  - மிகவும் தவிர்க்க முடியாமல் மாற்ற வேண்டியிருப்பின் உடனடியாக வ.க.ப க்கு தொலைபேசியில் அறிவித்தல்.
- நிதி
  - பொருத்தமான நிதிமூலம்
  - உத்தமமான (Optimum) செலவுகள்
  - வெளிப்படையான கணக்கறிக்கைகள் – உரிய சிட்டைகளுடன்